# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



11.02.2026 நிகழ்வுகள்

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

**1. பழங்குடிப் பகுதிகளில் மொபைல் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்திடுக**

**காஞ்சிபுரம் ஜி.செல்வம்**

**திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை**





தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் பல குடியிருப்புகள் மொபைல் இணைப்புமகள் இல்லாமல் பாதிக்கப்படுகின்றன. டிஜிட்டல் பாரத் நிதி மூலம் தமிழ்நாட்டின் கிராமப்புற, தொலைதூர மற்றும் பழங்குடிப் பகுதிகளில் அரசு மொபைல் கோபுரங்களை அமைக்கும் திட்டம் குறித்து தமிழ்நாட்டில் உள்ள பழங்குடி சமூகங்களுக்கு சரியான நேரத்தில் முறையான உள்கட்டமைப்பு வசதிகள், மற்றும் தடங்கலில்லா மொபைல் சேவைகளை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**2. சேவை தர விதிமுறைகளை மீறும் செல்போன் நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்க தாமதம் ஏன்?**

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி**



இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தொந்தரவு தரும் அழைப்புகளுக்கு அபராதம் விதிப்பது, சேவை தர விதிமுறைகளை மீறுதல் மற்றும் சேவை தரத்தின் அறிக்கையை சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதம் தொடர்பாக TRAI பிறப்பித்திருக்கும் உத்தரவுகள் குறித்தும் இந்த கணக்குகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை சேவை வழங்குநர்களிடமிருந்து TRAI இன்னும் பெறாதது ஏன்?

**3. தமிழ்நாட்டில் இரயில் பாதைகளை மின்மயமாக்கல் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டது ஏன்?**

**தேனி தங்க தமிழ்ச்செல்வன்**

**கோவை கணபதி ராஜ்குமார்**





தமிழ்நாட்டில் இன்றுவரை இரயில் பாதைகளின் மின்மயமாக்கல் நிலுவையில் உள்ளது குறித்தும், இத்திட்டத்திற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையின் விவரங்கள் கேட்டும் திமுக மக்களவை உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார் மற்றும் தங்க தமிழ்செல்வன் கேள்வி எழுப்பியுள்ளனர். இத்திட்டங்கள் முடிவடைய விதித்திருக்கும் காலக்கெடு என்ன? 2023-24 மற்றும் 2024-25 நிதியாண்டுகளில் முடிக்கப்பட்ட மொத்த கிலோமீட்டர் தூரம் என்ன என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

**4. நிலக்கரி சுரங்கத்தைத் திறப்பதற்கான விதிகள் குறித்த அறிவிப்பில் குழப்பங்கள் ஏன்?**

**சேலம் டி.எம்.செல்வகணபதி**



நிலக்கரிசுரங்கத்தைத் திறப்பதற்கான நிலக்கரி கட்டுப்பாட்டு அமைப்பின் ஒப்புதலை ரத்து செய்யும் விதிகளை அரசாங்கம் அறிவித்திருப்பது குறித்தும் இந்தத் திருத்தம் சம்பந்தப்பட்ட நிலக்கரி நிறுவனத்தின் வாரியத்திடம் தேவையான அனுமதிகளை வழங்க அதிகாரம் உள்ளதா? 180 நாட்கள் அல்லது அதற்கு மேல் செயல்படாத சுரங்கங்களை மீண்டும் தொடங்க அனுமதிக்கும் இந்தத் திருத்தத்தின் விவரங்கள் என்ன? நிலக்கரி கட்டுப்பாட்டு அமைப்பின் பங்கு வாரியத்தால் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்புதல் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் என்ன?

**5. தமிழ்நாட்டில் ப்ராட்பேண்ட் சேவை மேம்படுத்தும் பாரத்நெட் திட்டத்தில் சுணக்கங்கள் ஏன்?**

**கள்ளக்குறிச்சி தே.மலையரசன்**



பாரத்நெட் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இணைக்கப்பட்டுள்ள கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை என்ன? இரண்டாம் கட்டத்தை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அதற்கான காலக்கெடு? தமிழ்நாட்டில் பாரத்நெட்டை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்? தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் சேவை வழங்குநர்கள் பிராட்பேண்ட் இணைப்பை வழங்க பாரத்நெட் உள்கட்டமைப்பைப் பயன்படுத்துவதன் அளவு? மலிவு விலையில் இணைப்புகள் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்? கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாட்டில் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, முகையூர் ஊராட்சி ஒன்றியம், சென்னகுணம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நிழற்குடையை கழக துணைப் பொதுச்செயலாளர். முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் இரா.கற்பகம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ்.லூயிஸ், ஒன்றியக் குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, மற்றும் பலர் உடனிருந்தனர்.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பயிற்சிக் கூட்டம்!

## முனைவர் க.பொன்முடி சிறப்புரை! பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், பிப்.13-

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:-



விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பயிற்சிக்கூட்டம் இன்று (13.02.2026 - வெள்ளிக்கிழமை) விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் மாலை 4.00 மணியளவில் மகளிர் அணி சகோதரிகளுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர். முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்து கொள்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என். முருகன், இரா.கற்பகம், தொகுதி பார்வையாளர்கள் ஜெயராஜ், ஜி.கார்த்திகேயன், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, வெல்லும் தமிழ்ப் பெண்கள் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் என்.கலைச்செல்வி, கே.அமுதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு உட்பட்ட மகளிர் அணி சகோதரிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

### மதுரை வடக்கு மாவட்டம் – மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி

# தி.மு.க. சார்பாக ‘தமிழ்நாடு தலைகுனியாது’ மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் – பி.மூர்த்தி சிறப்புரை! பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

மதுரை, பிப்.13–

மதுரை வடக்கு மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் ஆனையூரில் நடைபெற்ற ‘தமிழ்நாடு தலைகுனியாது’ மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி ஆகியோர்சிறப்புரையாற்றினர். இந்த கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதல்படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டம் ஆனையூர் பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை வகித்தார்.

மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. வாழ்த்துரை வழங்கினார். ஆனையூர் பகுதி செயலாளர் ஏ.மருதுபாண்டியன் வரவேற்றார்.

ஒன்றிய செயலாளர்கள் சிறைச்செல்வன், அ.பா.ரகுபதி, மதிவாணன், முகமது அப்துல் காதர் என்ற ஹக்கீம், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், கௌரிசங்கர், பாண்டியராஜா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்கழக தேர்தல் பணிக்குழு தலைவர் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது பேசிய அவர்

மதுரை கிழக்கு தொகுதி சிறப்பான அம்சமான தொகுதி,

தென்மாவட்டத்தில் 58 தொகுதிகளில் 53 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என முதல்வரிடம் தெரிவித்துள்ளோம், ஒன்றிய அரசு நியாயமானதை சொன்னால் ஏற்போம் நியாய மற்றதை சொன்னால் ஏற்க மாட்டோம், மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு மிகக்குறைந்த அளவில் நிதி கொடுக்கிறார்கள். அ.தி.மு.க. எம்ஜிஆர் ஜெயலலிதாவோடு முடிந்துவிட்டது.

தொண்டர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். நிர்வாகிகள் சீட்டுக்காக அங்கு உள்ளனர்.

**அமித்ஷா அ.தி.மு.க.வாக மாறிவிட்டது.**

தற்போது அ.தி.மு.க. அமித்ஷா அ.தி.மு.க.வாக மாறிவிட்டது

நான் நிறைய தோல்விகளை சந்தித்துள்ளேன். அதற்காக வருத்தப்படவில்லை. பல மிட்டா மிராசுகளை பண்ணையார்களையும் எதிர்த்து உருவானது தான் நம் இயக்கம் காங்கிரஸ் கூட்டணியைப் பற்றி முதல்வர் பேசிக்கொள்வார்.

எம்.ஜி.ஆர். 30 ஆண்டுகள் தி.மு.க.வில் இருந்ததால் தான் பக்குவப்பட்டார்,

நமது முதல்வர் 55 ஆண்டுகால அரசியல் அனுபவம் கொண்டவர், யார் பின்னால் எங்களை போன்றவர்கள் செல்ல வேண்டும் என உள்ளது, எனக்கு பின்னால் எடப்பாடி பழனிசாமி எம்.எல்.ஏ. ஆனவர்,

**என்னை பிள்ளை போல வளர்த்தவர் கலைஞர்!**

என்னை தன் பிள்ளை போல வளர்த்தவர் கலைஞர் அவர்கள்,

அரசியல் தலைவருக்கு இலக்கணமானவராவார்.

மந்திரி என்பது வரும் போகும். வெற்றி தோல்வியை பற்றி கவலைப்படும் இயக்கம் திமுக அல்ல, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலினை விட்டுவிட்டால் அது நமக்கு தமிழ்நாட்டுக்கு நல்லதல்ல என்ற அவர் மோடி எத்தனை முறை வேண்டுமானாலும் தமிழகம் வந்து செல்லட்டும் அதனால் ஒரு பயனும் அல்ல, 15 ஆண்டுகளாக எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடக்கிறது. இதுவரை பணிகள் முடிந்தபாடில்லை. ஆனால் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவு தல் அரங்கம் என பல வரலாற்று கட்டிடங்களை குறுகிய காலத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளோம்

அதனால் திராவிட மாடல் அரசின் திட்டங்களே மீண்டும் மதுரை மாவட்டத்தில் 10 தொகுதிகளையும் தி.மு.க. வெற்றி பெற்று ஏழாவது முறையாக திமுகவும், இரண்டாவது முறையாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும் அரியணை ஏறுவது உறுதி என தெரிவித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள் விஜயகதிரவன், சுப.த.சம்பத், வ.து.ந. ஆனந்த், மருத்துவர் திலீப் ராஜ கண்ணப்பன், மாநில மாவட்டக்கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், ரோகிணி பொம்மதேவன், சோமசுந்தர பாண்டியன், நேருபாண்டியன், கலை கார்த்திகேயன், மதுரை பாலா,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எம். இளங்கோ, ஆதிசங்கர், உமா சிங்கத்தேவன், ஆனையூர் பெரியசாமி, வீரராகவன், அண்ணாமலை, மருதுராஜா, வட்டச் செயலாளர் முருகேசன், உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

முடிவில் வட்டச் செயலாளர்கள் செல்வகணபதி, பாபு நன்றி கூறினர்

### திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி சார்பில்

# மரக்காணம் ஒன்றியம் சிறுவாடியில் பொதுக்கூட்டம்!

## மாநில கொள்கை பரப்பு செயலாளர்– முனைவர் சபாபதி மோகன் சிறப்புரை!

மரக்காணம், பிப். 13-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி சார்பில் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும், ‘தமிழ்நாடு தலைகுனியாது’ மாபெரும் பரப்புரை மற்றும் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மரக்காணம் மத்திய ஒன்றியம் வேப்பேரி சிறுவாடி முருக்கேரி கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மரக்காணம் மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்டக் கழக துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், மரக்காணம் துணைச் சேர்மன் பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மரக்காணம்கி ழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர்தயாளன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் மாநில கொள்கை பரப்பு செயலாளர், தலைமைக் கழக பேச்சாளர் முனைவர் சபாபதி மோகன், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகிய கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன் பேசுகையில்:

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை. ஆனால், குஜராத், பீகார், உத்தரப்பிரதேசத்திற்கு அதிக நிதியை ஒன்றிய அரசு வழங்கி வருகிறது பி.ஜே.பி. அரசு கலைகின்ற வரை தமிழ்நாட்டில் 100 நாள் வேலை கிடையாது. கல்வித்துறைக்கு கொடுக்க வேண்டிய நிதியை கொடுக்க மறுக்கின்றனர் தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்கின்ற அரசாக ஒன்றிய அரசு உள்ளது. கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் குடமுழுக்கு செய்த கோவில்களின் எண்ணிக்கை 632. ஆனால் கடந்த 43/4 ஆண்டுகளில் 4000 கோயிலுக்கு குடமுழுக்கு செய்துள்ள ஆட்சி தி.மு.க. ஆட்சி.

மேலும் தமிழ்நாட்டில் 8 லட்சம் மாணவிகளுக்கும் 5 லட்சம் மாணவர்களுக்கும் புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாயும் 42 லட்சம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற ஆட்சி ‘திராவிட மாடலாட்சி’.

மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், ‘நலமுடன் ஸ்டாலின்’, ‘உங்களுடன் ஸ்டாலின்’ இது போன்ற திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ளது. பிரதமர் ஆண்ட குஜராத் மாநிலத்திலும் உத்தரப்பிரதேஷ் மாநிலத்தை ஆளும் யோகி கொண்டு வந்துள்ளாரா? தமிழ்நாட்டின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் காப்பி அடிக்கின்றதாகவும் இத்திட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலும் உண்டா என கேள்வி எழுப்பிய சபாபதி மோகன் தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்கின்ற அரசாக ஒன்றிய அரசு உள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், சேதுநாதன், செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் திருமலை, செந்தில்குமார், மரக்காணம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் தியாக ராஜன், வீரப்பன், தேவி ராஜதுரை, சந்திரசேகர், தனசேகர், மரக்காணம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் குமார், ரவிக்குமார் மீனாகுமாரி, தேவதாஸ், மரக்காணம் மத்திய ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன், செல்வம், சுரேஷ்குமார், சுமதி பார்த்தசாரதி, ரவிசங்கர், பாபு, ஆதிகேசவன்,திண்டிவனம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் சங்கர், மரக்காணம் பேரூர்மாணவர் அணி முத்துவேல், பொறியாளர் அணி கலைவாணன், தகவல் தொழில்நுட்ப அணி நரேஷ் குமார், இளைஞரணி துணை அமைப்பாளர் கோபிநாத், கவுன்சிலர் பிரபாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்டப் பிரதிநிதி பாபு அனைவருக்கும் நன்றி கூறினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.மலையாளம்

பிப்ரவரி 13 (2000)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருச்சி, மணப்பாறை நகரக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பொறுப்புகள் வகித்தவர்.

தியாகேசர் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவராக பொறுப்பு வகித்து, தொழிலாளர் நலத்திற்கென பாடுபட்டவர்.

மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் இரா. அருணகிரி

பிப்ரவரி 13 (2005)



நாமக்கல் நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பின்னர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இரு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்புக்குழு துணைத் தலைவராகவும், மாநில கூட்டுறவு இணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.